RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22247

OPEN ACCESS

# சங்க, சங்க மருவிய கால இலக்கியங்களில் வழிபாட்டு மரபுகள்

ஏ. மேரி மேசபிரியம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-600059, தமிழ்நாடு, இந்தியா

# Liturgical Traditions in the Literature of the Sangam Periods

E. Mary Nesapriyam [a, *]

[a] Department of Tamil, Madras Christian College, Tambaram-600059, Tamil Nadu, India

* Corresponding Author: marynesapriyam@mcc.edu.in

Received: 22.09.2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Society is a system in which various parts work together. The message of worship traditions in Sangam literature is taken up for analysis in this article. Ancient man began to worship nature out of fear. It can be known that the cults appeared after being subjected to many threats. Due to many searches, a system established by man is considered as a tradition of worship. In Tamil society, it can be seen that there is spirit principle, ancestor worship, polytheism, etc. These literatures show that not only the five gods which are elements of nature, but also mountains, states etc. have played a major role in nature worship. They also had a practice of worshiping the human being. The tradition of worshiping the deceased in the midst of the war dead is a very proud and admirable practice practiced in the Tamil community. Tolkapiyam gives us a grammatical account about the middle-stone worship tradition. The name of the hero, his merits and his specialty etc. are mentioned in the middle stone. It is special that Tolkapiya also gives us a grammatical account of this middle-stone worship tradition. To worship the middle stone god, the custom of sacrificing a lamb with a stone and beating the rice stick is found in Sangam literary works of Akananuru and Purananuru. In the Silapathikaram which appeared in the later period of the Sangam literature, there is also the worship of nature and the worship of middle stone. There is also a practice of sacrificing the head to the deity by scratching its own head. Following this, the practice of head sacrifice can be seen in sculptures at places like Mahabalipuram and Uchippillaiyar Temple. It can be known that the practice of head sacrificing existed from eighth century AD. After this period man took up Samarasa worship. Samara worship began to take root to fulfill the purpose of treating all the deities as one and treating the deities as one form and worshiping the same object as deity without distinction. It is also said that the Lord should be worshiped in the state of light. This study reveals the traditions of worship through nature worship, middle stone worship, samrasa worship and various other worships.

**Keywords:**, Sangam Literature, Worship, Traditions, Customs, Beliefs

## முன்னுரை

சமய நம்பிக்கைகள் முன் வரலாற்றுக் காலம் தொடங்கி இன்று வரை மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்துள்ளதோ அங்கே எல்லாம் சமய வழிபாடுகள் வேரூன்றி வந்துள்ளன. எந்தெந்த சமுதாயங்களில் எவ்வகையான சமய வழிபாட்டு மரபுகள் உள்ளன என்பது பற்றிய ஆய்வுகள் செனோபான்ஸ் ஹெரோடாட்டஸ் காலம் தொடங்கி இன்று வரை தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையான வழிபாட்டு ஆய்வுகள் மூலம் வெளி உலகத்தில்

இருந்து அறவே துண்டிக்கப்பட்டு தனிமையில் வாழும் பழங்குடிகளின் வழிபாட்டு நம்பிக்கைகள் முதல் பெரும் சமுதாயமாக வாழும் நவீன மக்களின் வழிபாட்டு நம்பிக்கை வரை அறிய முடிகின்றது. முன் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனித மூதாதையர்களான நியாண்டர்தால்மனிதன் (Neanderthal Man) காலத்திலேயே சமய வழிபாட்டு நம்பிக்கை ஏற்பட்டு விட்டதாக கருதப்படுகிறது. இத்தகைய வழிபாட்டு மரபுகள் சங்க, சங்கமருவிய கால இலக்கியங்களின் வாயிலாக தமிழ் சமூகத்தில் இடம்பெறும் முறையினை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

## வழிபாடு

இறைவன் இருக்கின்றார் என்பதையும் வாழ்க்கைக்கான ஒழுக்கங்களையும், அற நெறிகளையும் போதிக்கும் எந்த ஒரு சமுதாயத்தினை சேர்ந்தவர்களும் அவரவர் தங்கள் விருப்பப்பட்ட தெய்வங்களை கோவில், தேவாலயம், பள்ளிவாசல் போன்ற பொது இடங்களிலோ அல்லது வீடுகளிலோ மற்றஏற்படுத்தப்பட்ட பழக்கப்பட்ட நியம நியதிகளை பின்பற்றி ஆராதிக்கும் முறையே வழிபாடு ஆகும்.

சமயங்கள் சார்ந்த வழிபாடு என்பது புனிதமான ஒன்றை (Sacred Thing) பற்றிய நம்பிக்கைகளும், செயல்முறைகளும் அடங்கிய ஒரு ஒழுங்கு அமைந்த முறையாகும் என்பார் எமிலி தர்க்கை. இக்கருத்தை மேலும் பரந்த பொருள் உடையதாக மாற்றி ஓடியா என்பவர் பகுத்தறிவிற்கு எட்டாததும் (Non - ratimal) செயல் அறிவிற்கு உட்படாததுமான (non empirical)ஓர் உலகத்துடன் தொடர்பு கொள்ள மக்கள் ஏற்படுத்திக் கொண்ட முறையை சமயம் என வரையறை செய்கிறார் (Bhakhtavacala Bharathi, 2014).

### வழிபாட்டின் தோற்றம்

ஆதிமனிதன் இயற்கையின் பாதிப்புகளுக்கும், தாக்குதல்களுக்கும் ஆட்பட்ட பிறகு தன்னை காப்பாற்றிக்கொள்ள முயன்ற நிலையில் தோன்றியதே கடவுள் கோட்பாடும் வழிபாடும். இயற்கை வெளிப்படுத்திய அச்சத்தின் காரணமே மனிதன் கடவுளை நோக்கி சென்றான் என்பது மானிடவியலாளர்களின் கருத்தாக கொல்லப்படுகிறது. தர்க்கத்துக்கு அகப்படாத தேடல்களில் மனிதர் பலருக்கும் வாழ்வாதார நம்பிக்கையை வழிபாடும் மூலமாக பெற்றுக்கொள்கிறான். பழந்தமிழர் சமய வாழ்வில் ஆவிக் கொள்கையும், முன்னோர் வழிபாடும், பல தெய்வ வழிபாடும் சிறப்பிடம் பெற்றுள்ளதாக கருதப்படுகிறது.

## இயற்கை வழிபாடு

மனித இனங்களுக்கிடையே வழிபாடு பற்றிய நம்பிக்கை முதன் முதலில் ஏற்பட்டிருக்குமாயின் அது இயற்கை பொருட்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு அப்பொருளை வழிபட்டதன் மூலமே ஏற்பட்டிருக்கும் என்பார் மேக்ஸ் முல்லர். எகிப்திலும் பிற பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலம் இயற்கை வழிபாட்டிற்கான சான்றுகள் கிடைத்துள்ளது. இங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்களை நுணுக்கமாக ஆராய்ந்தால் தொன்மை மக்கள் இயற்கை பொருட்களின் மீது கொண்டிருந்த அச்சத்துடன் கூடிய வியப்பையும் மதிப்பையும் ஈடுபாட்டையும் போற்றத்தக்க எண்ணத்தையும் அறிய முடிகின்றது. இயற்கை பொருள்களை வழிபாட்டு பொருள்களாக ஏற்றுக் கொண்டதற்கு அவர்கள் தவறாக பொருள் கொண்ட முறையை இன்றும் மக்கள் வழங்கும் சொற்றொடர் மூலமாகவே அறிய முடிகின்றது.எடுத்துக்காட்டாக, சூரியன் உதயமாகிறது, சூரியன் மறைகிறது, இடியும் மின்னலும் மழையை கொண்டு வருகின்றன, மரங்கள் பூக்களையும் கனிகளையும் உண்டாகுகின்றன. இவ்வாறு இயற்கை சார்ந்த வழிபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொன்மை மக்கள் இயற்கை பொருட்களை வழிபட்டனர் என்பதை ஏற்றுக் கொள்வதில் எவ்வித சிக்கலும் இல்லை என்பதை அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரத்தின் தொடக்க வரிகளிலே இயற்கையை வழிபட்டு போற்றி இயற்கையோடு இணைந்து இறைவனை வணங்கும் பண்பு குறிப்பிடப்பட்டுள்ளன.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் கொங்கலர் தார் சென்னி குளிர்வேன் குடை போன்ற அங்கன் உலக அழித்த பிளான். ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் காவிரி நாடன் திகில் போல் பொற்கோட்டு மேருவலம் திரிதலான். மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிப்போல் மேல் நின்று தான் காத்தலான் சிலப்பதிகாரம் 1-9 .

இப்பாடல் வரிகளில் திங்கள்,ஞாயிறு,மாமழை, மாநிலம் ,மேருமலை,இமயமலை, பொதிகை மலை, பூம்புகார் என்று இயற்கையை முதன்மைப்படுத்தி வழிபட்டுள்ளனர். இயற்கை வேறு தெய்வம் வேறு அல்ல என்பதையும் இயற்கையின் மீது நம்பிக்கை கொண்டு இயற்கையை வழிபடுகின்றனர்.

திங்களைப் போற்றுதும் ஞாயிறு போற்றுதும் மாமழை போற்றுதும் பூம்புகார் போற்றுதும் என ஒவ்வொன்றும் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளன இயற்கையை மிகைப்படுத்தி கூறியுள்ள பாங்கு இங்கு காணப்படுகிறது இதனை மா.பொ.சி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

மனிதன் உணர்ச்சி வயப்படும்போது ஒருமுறை கூறியது திரும்பத் திரும்பக் கூறுவான் ..உணர்ச்சி வயப்படுவது பக்தி மிகுதியாலும் நிகழலாம் .அன்பு மிகுதியாலும் நிகழலாம். சினம் அதிகரிக்கும் போதும் ஏற்படலாம். இளங்கோவடிகள் திங்களையும்,ஞாயிறையும்,மாமழையையும், பூம்புகாரையும் கண்கண்ட தெய்வங்களாக கருதி மிகுந்த பக்தியோடு போற்றுகிறார் (Visayaragavan, 2013). இளங்கோவடிகள் உணர்ச்சி மிகுதியின் காரணமாக பக்தியினை பயன்படுத்துகிறார். பாடுபொருளாக இயற்கையை முதன்மைப்படுத்தி இயற்கை வழிபாட்டை வலியுறுத்தியுள்ளார்.

இயற்கையின் கூறுகளாக கருதப்படும் நிலம், நீர் ,தீ ,காற்று, ஆகாயம் ,மலை,ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கை பொருட்களை வழிபடும் தன்மை இயற்கை வழிபாடு என்கிறோம்.ஞாயிறு,திங்கள், தீச்சுடர் ஆகிய இயற்கையின் முக்கூறுகளை வழிபட்டதனை தொல்காப்பியர் பாடாண் திணையில்,

கொடிநிலைகந்தழி வள்ளி என்ற வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.(தொல் .புறம் 85) எனக் கூறியுள்ளார் இயற்கை பொருள்களிலெல்லாம் தெய்வக் காட்சியை கண்டாலும் பெரும் தெய்வங்களுக்கும் சிறு தெய்வங்களுக்கும் கோவில் எடுத்து வழிபட்டனர் என்பதை,காடு கொன்று நாடு ஆக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி பிறங்கு நிலை மாடத்து உறந்தைபோக்கி கோயிலோடு குடி நிறீஇ (பட்டினப்பாலை 283 -2086) என்னும் பட்டினப்பாலை பாடல் கொண்டு அறிய முடிகின்றது (Arul Pathmarajan, 2010)

நடுகல் வழிபாடு போரில் விழுந்த வீரரை கல்லில் அமைத்து வழிபடும் வழக்கம் பண்டைத் தமிழ் மக்களிடம் காணப்படுகிறது வீரரின் நினைவிற்காக கற்கள் நிறுத்தப்பட்டு அவற்றின் அருகில் கேடயங்களும் ,ஈட்டிகளும் வைத்து வழிபட்டனர். இத்தகைய கற்கள் நடு கற்கள் என பெயர் பெற்று தெய்வங்கள் ஆகவே வழிபாடு வந்த வழக்கம் காணப்படுகிறது. இதனை மலைபடுகடாம் எடுத்துக் கூறுகின்றது.

பெயர் மருங்கறிமார் கல் எரிந்து எழுதிய நல்லரை மராஅத்த கடவுள்.(மலைபடுகடாம் 394 - 396) குற்றமில்லாத தொடையை உடைய மறவரின் அன்பினால் இறந்தவரது பெயர் பொறிக்கப்பட்ட நடுநிலை பற்றிய செய்தி ஐங்குறுநூற்றிலும் வீரரது பெயரினையும் சிறப்பினையும் பொறித்து வழிதோறும் மயில் தோகை அணிந்து விளங்கும் நடு கற்களை பற்றிஅகநானூற்றும்புறநானூறும் பல இடங்களில் சிறப்பித்து குறிப்பிடுகின்றன. நடுகல் கடவுளை வழிபடுவதற்கு அக்கல்லில் மயில் தோகைகள் சூட்டி துடியை அடித்து நெல்லாக்கிய கல்லோடு செம்மறி குட்டியை பலி கொடுக்கும் வழக்கம் அகநானூற்றில் காணப்படுகிறது.

நடுகல் பீலிசூட்டித்துடிப்படுத்துத்தோப்பிக்கள்ளொடுதுரூ உப்பலி கொடுக்கும்.(அகநானூறு 8- 9.) நடுகல் அமைத்தல் அக்காலத்தில் பெருவழக்கில் இருந்தமையால் அவற்றை அமைத்தற்குரிய முறைகள் யாவும் ஒழுங்காக பின்பற்றப்பட்டுள்ள வழக்கு காணப்படுகிறது. தொல்காப்பியரும் இம்முறைகளை ஒழுங்குப்படுத்தி இலக்கணமாக விளக்கிக் கூறியுள்ளார்.

காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல் சீர்த்தகு சிறப்பிர் பெரும்படை வாழ்த்தலென் இரு மூன்று வகையில் கல்லோடு (Ganesaiyar, 2010).

நடு கல்லிற்கு நீராட்டி தூய தீபங்களுடன் பலிகளை இட்டு வணங்குதல் அரசனுக்குரிய முரசதத்தை நீராட்டி போற்றுதல் போன்ற வழக்கங்கள் இருந்ததை புறநானூற்றுப் பாடல்கள் உறுதி செய்கின்றன.

இல்அடுகள்ளின் சில் குடி சீறூர்ப்புடை நடு கல்லின் நாட் பலி ஊட்டி நல்நீராட்டி நெய் நறைக்கொளீயிய மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும் அருமுனை இருக்கைத்து ஆயினும் வரிமிடற்று (புறம் 325 :1-5) ஒன்று முதல் ஐந்து.

மாசு அற விசித்த வார்புறுவல்பின் மைபடு மருங்குல் பொலிய மஞ்சை ஒலிநெடும் பீலி ஒண் பொறி மணித்தார் பொலம் குழைஉழிஞை ஒடு பொலிய சூட்டி குருதி வேட்கை உறுக்கெழு முரசம் (புறநானூறு 50 1-5)

நடு கல்லிற்கு நீராட்டி மலர் அணிந்து விளக்கேற்றி தூபம் புகைத்து உரிய பொருள்களை வழிபாட்டுக்கு படைக்கும் வழக்கம் இருந்ததை "தெய்வமடை" என்று பெரும்பானாற்றுப்படை வாயிலாக அறிய முடிகின்றது. மன்றங்களிலும் விளையாடும் கலங்களிலும் வழிபட்ட தெய்வங்களுக்கும் குருதி பலியும் செய்கின்றனர். அரிசியை பலியாக சிதறுதல் ஆட்டு மறியை அறுத்தல் மறியின் குருதியை சோற்றுடன் கலந்து திரளையாக செய்துபலி தூவுதல்,கள் வைத்தல் முதலிய வழக்கங்கள் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. பலியிடுவதற்கு பலிப்பீடமும் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அகநானூற்றுப் பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

"உயிர் பலி பெறூஉம் உருகெழுதெய்வம்" (Balasubramaniyan, 2004)

கல் தெய்வங்களை சங்க இலக்கியங்கள் திரும்பத் திரும்பக் கூறுவதால் அக்காலத்தில் நடுகல் வழிபாடு சிறப்பு வாய்ந்தவையாக காணப்படுகிறது. இல்லை எனினும் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்ற அய்யனார் கோவில்கள் வீரர்களுக்கு கள்ளமைத்து வழிபடும் பழக்கத்தோடு தொடர்பு உள்ளவைகளாகவே இருக்கின்றன, நடுகல்வழிபாடு.

போரில் வீர மரணம் அடைந்த ஆண் மக்களுக்கு எடுக்கப்படும் நடுகற்களை போல தம் கணவனோடு உடன்கட்டை ஏறிய பெண்களுக்கு எடுக்கப்படும்கல் சதிக்கல் எனப்பட்டது. நடுகல்லாய் நின்ற வீர மறவருக்கு ஆண்டுக்கு ஒரு முறை அவன் விரும்பிய உணவை பலியிட்டு வணங்குதல் மரபாக உள்ளது. ஆனால் இவர்களுக்கு ஆகம விதிப்படி பூசைகள் செய்யப்படுவதில்லை என்பதை அறிய முடிகின்றது இந்நடுகல் மரபே பிற்காலத்தில் குலதெய்வ வழிபாட்டிற்கு அடிக்கோளியது என்று கருதப்படுகிறது.

கண்ணகிக்கு எடுக்கப்பட்ட சதிகல்லானது வழிபாட்டு மரபில் நூல் அறிந்த பார்ப்பனர்களைக் கொண்டு முறையான பூசைகள் மற்றும் விழாக்களை செங்குட்டுவன் ஏற்பாடு செய்தது என்று ஆகம மரபை சார்ந்ததாக அறிய முடிகிறது. நடுகல்லில் வீரனது உருவத்தை புடைப்புசிற்பமாக செதுக்கி அவனது சிறப்புகளை கல்லில் செதுக்கும் வழக்கம் காணப்படுகிறது. கண்ணகியின் உருவம் அவ்வாறு புடைப்புஉருவமாக செதுக்கப்பட்டதா? அல்லது முழு வடிவமும் சிற்பமாக செதுக்கப்பட்டதா? என தெரியவில்லை. ஆனால் நடுக்கற் காதையில் கைவினை முற்றிய தெய்வப் படிமத்து என்னும் வரியால் சிற்பமாகவே கண்ணகியின் உருவம் வடிக்கப்பட்டு இருக்கலாம் என கருத முடிகின்றது. அவ்வாறு உருவம் வடிவமைக்கப்பட்டமையை ஏற்போம் எனில் இப்படிமமே தமிழகத்தில் கல்லில் செய்த முதல் படிமமாக இருக்க இயலும் என்று கருதப்படுகிறது. கண்ணகி மனிதப் பெண்ணாக இருந்து தெய்வம் நிலைக்கு உயர்த்தப்பட்டமையாலும் இக்கருத்தை ஏற்பதில் தவறில்லை என்றே கருதலாம்.

## தலை பலியிடுதல்

சிலப்பதிகாரத்தில் இந்திர விழாவின்போது அரசினது நலத்திற்காக தன் தலையை தாங்களே அரிந்து பீடத்தில் வைக்கும் மரபு காணப்படுகிறது. அக்காலத்து வீரர்களிடமிருந்து தலை பலியிடும் வழக்கத்தை சிலப்பதிகாரம் எடுத்து இயம்புகிறது. போரில் வெற்றி பெற்றால் உனக்கு என் தலையை தருவேன் என கூறி வெற்றிக்குப் பின் வெற்றிக்குரிய தெய்வமான கொற்றவை முன் தன் தலையைத்

தானே அரிந்து கொடுக்கும் வழக்கத்தை சிலப்பதிகாரம் மட்டுமல்லாது கலிங்கத்துப்பரணியிலும் காண முடிகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டை சேர்ந்த மகாபலிபுரம் பஞ்சபாண்டவர் தேவர்களில் திரௌபதி தொழில் இத்தகு தலை பலியிடும் சிற்பம் காணப்படுகிறது. அதே போல் திருச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயில் செல்லும் பாதையில் இடம்பெறும் கீழ்க்குடைவரை கோயிலிலும் காணப்படுகிறது. தலை பலியிடும் வழக்கம் சங்க காலம் தொடங்கி சிலப்பதிகாரத்தில் தொடர்ந்து கி.பி. எட்டாம் நூற்றாண்டிலும் தலைபலியிடும் வழக்கம் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

சூர்த்து கடை சிவந்த சுடு நோக்கும் கருந்தலை வெற்றி வேந்தன் குற்றம் கொள்கை எனநற்பலி பீடிகை நலம் கொல வைத்து ஆங்கு உயிர் பலி உண்ணும் உரும் குரல் முழக்கத்து மயிர்க்கண் முரசொடு வான்பலி ஊட்டி சிலப்பதிகாரம் இந்திர விழா 85.

## சமரச வழிபாடு

எல்லா தெய்வங்களையும் ஒன்றாக எண்ணி வழிபட வேண்டும் என்ற சிந்தனையை வள்ளலார், தாயுமானவர், பாரதி, நாமக்கல் கவிஞர் முதலானவர்கள் தம் பாடல் வழி எடுத்துக் கூறுகின்றனர். இதனை வள்ளலார் இன்னும் தனித்துவ தன்மையோடு உலகிற்கு எடுத்துக் கூறுகின்றார். எல்லா சமயங்களிலும் ஏதாவது ஒன்று பொதுத்தன்மை உடையதாய் அனைத்து சமயங்களிலும் உள்ளதாய் அனைத்து சமயங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் உள்ளதா என்பதை ஆராய்ந்து வள்ளலார் ஒரு மாபெரும் உண்மையை கண்டுபிடித்ததை அறிய முடிகிறது.பொதுத்தன்மை உடைய ஒன்றைத் தேடி சென்று அவருக்கு ஒன்றுக்கு பதிலாக இரட்டைத் தனையான பொதுத்தன்மைகள் கிடைத்தன. எல்லா சமயங்களும் தான் கூறும் முதற்பொருள் ஒளி வடிவானது என்று அவர் கண்டறிந்தார் அது மட்டுமல்லாமல் அப்பொருள் கருணை வடிவானது என்றும் வள்ளலார் கண்டறிந்து கொண்டார். எனவேதான் மாறுபட்ட இச்சமயங்களை ஒருங்கிணைக்க கருதியே வள்ளல் பெருமான் அனைத்து சமயங்களும் பொதுவான இரண்டு பண்புகளை ஒன்றாய் இணைத்து ஒரு தாரக மந்திரத்தை உருவாக்கினார்."அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை" அருட்பெருஞ்ஜோதிவள்ளலார் கண்டறிந்த இந்த சமய சமரசம் ஒளி வழிபாட்டின் தொன்மையும் பொது தன்மையையும் நமக்கு அறிவுறுத்துகின்றது."சாதி சமய சழக்கை விட்டேனருட்சோதியைக் கண்டேனடி"(ராமலிங்க அடிகளார்) என இறைவனை ஜோதி வடிவமாக ராமலிங்க அடிகளார் காண்பதால் பற்பல தெய்வ வழிபாட்டை எடுத்துரைக்கிறார் பாரதியார்.

"ஆத்திசூடிய இளம்பிறை அணிந்து

மோனதுருக்கு முழு வெண் மேனியான்

கருநிறம் கொண்டு பாற்கடல் மிசை கிடப்போன்

முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்

இயேசுவின் தந்தை என பல மதத்தினர்

உருவத்தாலே உணர்ந்து உணராது

பலவகையாக பரவிவிடும் பரம்பொருள்

ஒன்றே அதனில் ஒளியூறு மறிவாம்

அதன்நிலை கண்டார் அல்லை அகற்றினார்"

என்று பாரதியார் சமரசமாக பல தெய்வங்களை ஒன்றுப்படுத்தி சமமாக கருத வேண்டும் என்று தன் பாடல்களின் வாயிலாக எடுத்துரைக்கிறார்.

## முடிவுரை

வழிபாட்டு மரபுகள் காலம் காலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது மனித சமுதாயம் வழிபாட்டிற்கு மிக முக்கியத்துவம் கொடுத்தும் வந்துள்ளனர் என்பதை இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது இத்தகைய வழிபாடுகள் மனிதனது மனதிற்கு ஒரு ஆத்ம திருப்தியையும் வாழ்வின் பல்வேறு துன்ப நிலையில் வழிபாடு மனிதனுக்கு தன்னம்பிக்கையும் கொடுப்பதாலும் தான் அன்று முதல் இன்று வரை சமுதாயமும் இலக்கியமும் வழிபாடுகளை மரபாக கொண்டு போற்றி வருகின்றன. இந்த மரபு தமிழ் மக்களிடம் சங்க காலம் தொட்டே இருந்து வருவதை பல்வேறு இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. இத்தகைய வழிபாடு மரபு சார்ந்த நம்பிக்கைகள் மனிதனிடம் முதன் முதலில் இயற்கையை சார்ந்தே தோன்றியிருக்கக்கூடும். அதன் பின்பு தான் ஒவ்வொன்றாக ஏற்றம் பெற்று இலக்கியத்தின் வாயிலாக பல்வேறு வழிபாட்டு மரபுக் கூறுகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழ் சமூகத்தில் இயற்கை வழிபாடு நடுகல் வழிபாடு போன்றவற்றின் கூறுகள். பல்வேறு நிலைகளில் அமைந்துள்ளது என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது என்பது இவ்வாய்வின் முடிபாக கருதப்படுகிறது.

## References

Arul Pathmarajan, T. (2010) Tamil Panpadu, Tamilarasan Pathippagam, Chennai, India

Balasubramaniyan, K.V. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Bhakhtavacala Bharathi, (2014) Panpaattu Maanidaviyal, Manivaasagar Publication, Chennai, India

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Visayaragavan, K. (2013) Silappathikara Ilakkiya Kattamaipu, International Institute of Tamil Studies, Chennai, India.

Vithiananthan, S. (2014) Tamilar Saalbu, Paari Nelaiyam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License